உ

சிவமயம்



யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த

சைவ வேளாண்குல திலக வம்ச வழித் தோன்றல்

## சின்னத்தம்பி மார்க்கண்டு J. P.

(தலைவர் மானி, கோ. ப. ப. நோ. கூட்டுறவு சங்கம்)

அவர்களின்

தேகவி யோகத்தை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்: சி. மார்க்கண்டு

தோற்றம்
19-2-1919

மறைவு:
11-3-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி
-சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்
-கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்
-செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போது அறியவொ
-ண்ணா(து)
உனையுனும் உணர்வைநல்காய் ஒற்றியூர் உடைய
கோவே.

பிணிகொள் ஆக்கை பிறப்பு இறப்பெனும்
இதனை நீக்கி ஈசன் திருவடி யிணைக்காள்
துணிய வேண்டிடிற் சொல்லுகேன் கேள்நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்று
அணிகொள் வெஞ்சிலையால் உகச்சீறும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்தும்
திணியம் வார்பொழில் திருத்தினை நகருள்
சிவக் கொழுந்தினைச் சென்றடை மனமே
-சுந்தரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரிவாய் பொன்னம்பலந்(து) எம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்நின்றே.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையான் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னை
போற்றிசயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் (டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்ய குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
    சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
    கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
    வட நாற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
    தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
    சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
    பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராகதென்னே?
    நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
    செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
    சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
    தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய்
    எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
    கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
    சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
    உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே

சகல கலாவல்லியே!
சொல் விற்பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல் வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல் விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்டும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற்பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு

## அவர்களின்

# வாழ்க்கைப் பாதையில்.....

### [ திதி வெண்பா ]

''மாசிமகம் மருவியதோர் ஈசுரவாண்டு பங்குனியில்
ஆசிலாச் சதுர்த்திசேர் இருபத்தேழில் — காசினியில்
பேசரிய சின்னத்தம்பி மார்க்கண்டிம் மண்ணீத்தே
ஈசனோ டின்புற்றான் காண்''

''பார்வையோ எளிமை; குரலோ கண்டாமணியோசை; நெஞ்சமோ ஈரநெஞ்சம்''. இக்கூற்றுக்குரிய ....பெரியவன் இன்று நம்மிடையே இல்லை. அவர்தான் **அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு** அவர்கள்.

காலஞ்சென்ற பண்புடையாளன் சின்னத்தம்பி தில்லைவனம் என்னும் மங்கையை மணந்து ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவர்களுள் ஒருவர்தான் **அமரர் மார்க்கண்டு** அவர்கள். இவருடன் பிறந்த தையல்நாயகி, விஸ்வலிங்கம், சின்னத்துரை, பொன்னுத்துரை என்போர் அமரத்துவம் பெற்றுவிட்டனர். சின்னட்டித்தம்பி எனப்படும் முத்துத்தம்பி அவர்களும் சின்னப்பிள்ளை (மீனாட்சி) அவர்களும் இனிதே வாழ்கின்றார்கள்.

அமரர் மார்க்கண்டு அவர்கள் தம் சிறு வயதில் தமக்கையாருடன் சிங்கப்பூரில் வாழ்ந்து மூன்று வருடங்களாக ஆரம்பக் கல்வியை அங்கேயே பெற்றார். பின்னர் தாயகம் திரும்பி உடுவில் புனித மான்ஸ் பாடசாலையில் தம் கல்வியைத் தொடர்ந்தார். அதன்பின்னர் மட்டக்களப்பு, குருநாகல் ஆகிய இடங்களில் கட்டட ஒப்பந்த வேலை செய்தார். தமது இருபத்தாறாம் வயதில் ஆர். ஏ. எப் (R. A F)இல் சேர்ந்து வவுனியாவில் கடமையாற்றினார். பின்னர் கொழும்பில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமை வகித்தபோது 1956-ம் ஆண்டு இனக்கலவரம் காரணமாக வேலையை விடுத்து ஊர்திரும்பினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலத் தொண்டனாக மாறிய அமரர் அவர்கள் மானிப்பாய் கிராமசபையின் தலைவராகிப் பதின்மூன்று வருடம் சேவையாற்றினார். இக்காலப் பகுதியில் கிராமசபைக்குச் சொந்தமாகக் காணியொன்றினை வாங்கி அதில் கட்டடம் அமைத்து 1972-ம் ஆண்டில் அன்றைய உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த உயர்திரு ஆர். பிரேமதாசா அவர்களைக்கொண்டு திறந்துவைத்தார்.

தமது இறுதிக்காலம் வரை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபத்தில் 1968-ம் ஆண்டிலிருந்து ஒரு முகவராகப் பணி புரிந்தார். 1983-ம் ஆண்டு தொடக்கம் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றினார்.

அமரர் அவர்கள் ஊரில் உள்ள ஈஞ்சடி வைரவர் ஆலயப் பரிபாலன சபையிலும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயப் பரிபாலன சபையிலும் உறுப்பினராகக் கடமை புரிந்துள்ளார். சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்ஆலய முகாமையாளராகப் பல வருடங்கள் தொண்டாற்றினார்.

அமரர் அவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என ஊணை மறந்து உறக்கத்தை மறந்து மக்கள் நலனுக்காக உழைத்த பெருந்தகையாளர், பண்புடையாளர், பழகுதற்கினியவர்.

இவர் வட்டுக்கோட்டை துணைவி என்னும் இடத்தச் சேர்ந்த வைரமுத்து இராசம்மா தம்பதிகளின் மகள் மனோன்மணியை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தினார். அதன் பயனாக மங்களராஜன், மங்களேஸ்வரி, மங்களகுமாரி என்னும் மக்கட்செல்வங்களை மனைமாட்சியின் மங்கலமாகப் பெற்றார். திரு. மங்களராஜன் கட்டடப் பரிசோதகராகவும், ஒப்பந்தகாரராகவும் கடமை செய்பவர். இவர் அருந்ததி என்னும் மங்கை நல்லாளை மணந்து கேசிகா, யாதவன், இமயவன் என்னும் மக்களைப் பெற்றார்.

மங்களேஸ்வரி மனோரஞ்சன் என்னும் நம்பியைத் திருமணம் புரிந்து சிறிகணேஸ், சிறிபத்மநாதன், சிறிவரதன், சிறிதர்சினி, சிறிரஞ்சனி ஆகிய மலர்களைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்படுவதற்கு 1971-ம் ஆண்டில் முன்னின்று உழைத்தார் அன்று தொடக்கம் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டார்.

கீழ்க்கண்டவாறு அவரது உறவு அமைந்தது.

21-01-73 — 02-08-75 வரை நெறியாளர் குழு உறுப்பினர்
09-02-78 — 15-12-78 வரை நெறியாளர் குழு உறுப்பினர்
16-12-79 — 17-01-81 வரை தலைவர்
23-12-89 — 05-05-91 வரை தலைவர்
09-08-92 — 22-04-97 வரை நெறியாளர் குழு உறுப்பினர்
23-04-97 — 27-08-97 வரை தலைவர்,
நெறியாளர் குழு உறுப்பினர்
25-02-98 முதல் இறக்கும் வரை தலைவர்

இவ்வாறு நல்லவனாகவும், வல்லவனாகவும், இனியவனாகவும், உதவும் கரமாகவும், ஆலோசனை தரும் ஆசானாகவும் விளங்கிய அமரர் அவர்கள் 1998-03-11இல் மாசி மக நாளில் இறைபதம் எய்தினார்.

ஓம் சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

''புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் தீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டும் எஞ்சினால்
அண்ணலே அவிவதற் கையம் யாவதோ''

— கம்பர்

உ

# நினைவுரை

அமரத்துவம் எய்திய **சின்னத்தம்பி மார்க்கண்டு (J. P)** அவரைப் பற்றிய நினைவுரை.

அனைவருடைய மனக்கண் முன்நிற்கும் உத்தம புருஷன் சி. மார்க்கண்டு அவர்கள் சுதுமலையிலே பிறந்து பல சகோதரங்களுடன் கூடி வாழ்ந்து தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்து ஒரு ஆண் மகனையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்று அவர்களை வளர்த்து ஆளாக்கி நல்ல நிலைகளில் அமர்த்திய உத்தமபுருஷராவார். இவரை ஏறக்குறைய 40 ஆண்டு காலமாக இறக்கும்வரை எங்களுடன் உயிர்காப்பான் தோழன் என்பது போல என் குடும்பத்துடன் நண்பனாக விளங்கி வந்தார். அது மட்டுமல்லாமல் சுதுமலை மக்களோடு தோள் கொடுத்து பல சமூகப் பணிகளையும் ஆற்றிவந்த பெருமகனாவார். இவர் இந்த குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் சமாதான நீதவானாக நெடுங்காலமாக சமூகப்பணியாற்றி பல உதவிகளைப் புரிந்து மக்களின் பெரும் புகழைத் தேடிக்கொண்டவர் இது மட்டுமல்லாமல் சுதுமலை அம்மன் ஆலயத்தில் நிர்வாகத்தில் மூத்த உறுப்பினராகவும் முகாமையாளருமாக ஆலயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பாடுபட்டு முன்னின்று உழைத்தவர். இந்த நேரத்தில் என்னுடன் மிக அன்பாகவும் அவதானமாகவும் நடந்து கொள்வார் கோவிலின் நன்மை கருதி எனக்கு சில வழமைகளையும் ஆலோசனைகளையும் கூறுவார். இக் கோவிலின் செயற்பாட்டிற்கு என்னுடன் பக்கபலமாக நின்று எனக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறுவார். இன்றும் நான் கோவிலுக்குள் செல்லும் போது அவருடைய உருவம் என் கண்ணில் தெரிவதுபோல் இருக்கிறது. அவரின் குரலும் என்றும் என் செவிகளில் ஒலித்த வண்ணம் இருக்கிறது. இவர் இவ் உலகம்விட்டு நீங்கினாலும் மறு உலகத்திலும் தெய்வீகப்பணி செய்வார் என்பதில் ஐயமில்லை

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று."

என்பதற்கமைய வாழ்ந்து காட்டிய உத்தம புருஷனாகிய சின்னத்தம்பி மார்க்கண்டினது திடீர்மறைவு எங்கள் குடும்பத்திற்கும் மக்களுக்கும் ஒரு பெரும் இழப்பாகவும் அதிர்ச்சியாகவும் கவலையாகவும் உள்ளது. அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து எங்கள் கவலையை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

கிரியா கலாப முக்தாமணி
சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூட்டுறவாளன்'

# அமரர் திரு. மார்க்கண்டு அவர்கள்

வடபகுதிக் கூட்டுறவாளர் மத்தியில் தனக்கென ஒரு தனித்துவத்தை கொண்டிருந்தவர் அமரர் திரு சி மார்க்கண்டு அவர்கள் நல்லதோர் கூட்டுறவாளனாக, ஆற்றல் மிக்க நிர்வாகியாக மனித நேயப் பண்புகள் மிக்க கனவானாக, வாழ்ந்து மக்கள் மனங்களில் நீங்கா இடம்பெற்றுச் சென்றவர்.

ஆரம்பம் முதல் பொதுவாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டதன்மூலம் பல்வேறு சமூகப் பணிகளில் முன்னின்றுழைத்தவர் கூட்டுறவுப் பெரியார் திரு. வீரசிங்கம் அவர்கள் வாழ்ந்த பூமியிலே, அவரது அடியொற்றி சிறந்ததோர் கூட்டுறவு சேவையாளனாக வாழ்ந்து மானிப்பாய் பல நோ. கூ. சங்கத்தை பல வருடகாலம் தலைமை தாங்கி சிறப்புடன் வழி நடத்திய பெருமைக்குரியவர்.

ஆழமாக சிந்தித்து, துணிவுடன் முடிவுகளை மேற்கொள்வதில் அவரின் திறமை பலராலும் பாராட்டப்பெற்றது. பல்வேறு கஷ்டங்கள், இன்னல்கள் மத்தியிலும் இறுதிவரை கூட்டுறவு இயக்கத்தில் தன்னை இணைத்து மக்கள் தொண்டாற்றிய இப்பெருமகனது மறைவு வடபகுதிக் கூட்டுறவாளர் மத்தியில் ஈடுசெய்ய இயலா வெற்றிடம் ஒன்றை விட்டுச் சென்றுள்ளது அமரரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினர்க்கும் கூட்டுறவாளர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது இழப்பின் சோகத்தை எல்லாருடனும் பகிர்ந்து கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

கூட்டுறவுத் திணைக்களம் — செ. கு. சண்முகநாதன்
18/10, வைமன் வீதி — கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்
யாழ்ப்பாணம் — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலாச் சொல்

மிக நீண்ட காலமாக மானிப்பாய்க் கிராம சபைத் தலைவராக, சுதுமலை அம்மன் கோயில் முகாமையாளராக, நான்கு முறை மா. ப. நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக, நெறியாளராக, சமாதான நீதவானாக விளங்கிய ஒரு பெரும் சமூகத் தொண்டன் திரு. மார்க்கண்டு அவர்கள் எமது மத்தியிலிருந்து இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டார்.

அன்னாரது மிடுக்கான, கம்பீரத் தோற்றமும் கணீரென்ற குரல் வளமும், எவரையும் தாம் அறியாமலேயே அவர்பால் மரியாதை செலுத்த வைக்கும் பாங்குடையன. ஆயின் 1987லும் 1997லும் அவர் அடைந்த துன்பங்கள் தேவையற்றன, எனினும் இறுதிமூச்சு வரை இதனால் ஒரு சலிப்படையாத மனிதராகவே காணப்பட்டார். நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் அவரை விட்டு என்றுமே விலகியதில்லை.

பத்திரிகைகள் மூலம் அன்னாரிற்குச் செலுத்தப்பட்ட அஞ்சலிகள் — கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் அவர் தம் இல்லத்திலும் அவரிற்கு அணிவிக்கப்பட்ட மாலைகள், செலுத்தப்பட்ட இரங்கல் உரைகள் யாவும் அவர் மக்கள் மனங்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருந்தார் என்பதை எடுத்துக் காட்டின. அவர் ஆத்மா சுதுமலை அம்மன் திருவடியில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திப்போமாக !

க. பஞ்சலிங்கம்

உப தலைவர், மா. பல நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

## மாமனிதர் மார்க்கண்டு அவர்களுக்கு

# இதய அஞ்சலி

எமது சங்கத்தலைவராக இருந்த திரு. சி. மார்க்கண்டு அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற செய்தி 12-03-98 அதிகாலை வேளையில் எம்மையெல்லாம் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது; அவ்வதிர்ச்சி நிலையில் இருந்து இன்னமும் விடுபடாத நிலையில் நின்று எமது அஞ்சலியை செலுத்தி அவர் தம் பதம் வணங்குகின்றோம்.

எமது அன்புக்கினிய தலைவர் அவர்தம் பெருமை சொல்லும் ஆற்றலோ எமக்கில்லை. அவரை முதல் முதல் சந்திக்கும் எவரும் அவரது நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, சிங்கமெனக் கர்ச்சிக்கும் குரல் இவை அனைத்தும் அவர் ஒரு கடுமையானவர் என்று எண்ணவைக்கும். ஆனால் அவரது உள்ளமோ கரும்பினும் இனியது. பிறர் துன்பம் தன்துன்பம் என நினைக்கும் பண்பாளர், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாது எதையும் நேரில் பேசித்தீர்க்கும் உத்தமர். எமது சங்கம் இம்மண்ணில நிலைகொள்ள உழைத்த பெருமகனில் ஒருமகன் பத்து அகவைகளுக்கு மேலாக இச்சங்க நெறியாளராகவும் மூன்று அகவைகள் வரை சங்கத்தின் தலைவராகவும் இருந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிய ஆசான் இன்று எம்மத்தியில் இல்லை. இது எமக்கு மட்டுமல்ல எமது மண்ணிற்கே பேரிழப்பாகும்.

அவரது கணீரென்ற குரல் அவருக்கே உரித்தான சொற்பதங்கள் சில எம் ஒவ்வொருவரின் செவிகளிலும் ஒலித்தவண்ணம் உள்ளது.

மண்ணில் வருவதும் போவதும் இயற்கை என்றே எண்ணித் துன்பம் துடைப்போம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கும்

மானிப்பாய் கோவில்பற்று பல நோ. கூ. சங்க

**பொதுமுகாமையாளரும் பணியாளர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்களின்
மறைவையொட்டி வெளியிடும் நினைவு மலருக்கு
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய
தர்மகர்த்தா சபை சமர்ப்பிக்கும்

# இரங்கற் செய்தி

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்பது ஔவையாரின் அருள் வாக்கு. மனிதப்பிறவி மகத்தானது அறிவாகிய மனிதருக்கு மட்டும் பகுத்தறிவுண்டு. பகுத்தறிவின் துணைகொண்டு அல்லன நீக்கி நல்லன செய்ய வேண்டியது மனிதருடைய கடமையாகும். நமக்கு உடம்பைத் தந்த இறைவனை வழிபடுதலும் இறைபணி செய்தலும் மனிதருக்குள்ள தலையாய பணியாகும்.

அமரர் மார்க்கண்டு அவர்கள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பணிகளோடு தம்மை இணைத்துக் கொண்டவர் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர்கள், அம்பாள் பணிகளை அன்போடு செய்து பெருமை பெற்றவர். தர்மகர்த்தா சபையின் தோற்றத்திற்காக அரும்பாடு பட்ட பெரியார்களில் அமரர் மார்க்கண்டு அவர்களும் ஒருவர். தர்மகர்த்தா சபையின் ஆரம்பத்திலிருந்தே அவர் முகாமையாளர் தமது இறுதி மூச்சுவரை அப்பணியைத் திறம்படச் செய்து புகழோடு விளங்கியவர். அவருடைய இறுதிக் காலத்திலும் பாலஸ்தாபனம் செய்வதற்காக அமைக்கவேண்டிய பாலாலயத்தை சிறப்புடன் பூர்த்தியாக்கித் தந்த பெருமகன். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்று அருளிய அப்பர் பெருமானின் கொள்கைப்படி அரும்பணிகள் புரிந்த சேவையாளன் இன்று எம்முடன் இல்லை. அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவர்களின் சேவைகள் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

எங்கள் முகாமையாளரின் தோற்றப் பொலிவும், ஆளுமையும், நிர்வாகத் திறமையும் எம்மனக் கண்ணில் ஒளிவிடுகின்றன. அவரின் நகைச் சுவையுடன் கலந்த இனிய பேச்சும் எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது, எதற்காக மண்ணில் மனிதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியை எடுத்தோமோ அவற்றை அமரர் அவர்கள் பூர்த்தி செய்யப் பெரும்பாடுபட்டுள்ளார்.

தமர் பிறர் என்ற வேறுபாடின்றி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கொள்கையுடன் மக்களுக்காகச் சேவை செய்த சமூக சேவையாளன். சமாதான நீதவானாகவும், மானிப்பாய் கிராம சபைத் தலைவராகவும், மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையின் முகாமையாளராகவும் இன்னும் மானிப்பாய் கோவிற்பற்றிலுள்ள பொது அமைப்புக்களிலும் பங்கு கொண்டு அமரர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

சிறந்த சமூக சேவையாளனை, குடும்பத் தலைவனை இனிய பண்பாளனைப் பிரிந்து துன்புறும் குடும்பத்தவர்களின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். அம்மன் ஆலயத்திற்கு அவர் ஆற்றிய பெரும் பணிகளை நினைந்து அமரருக்கு அஞ்சலி செய்கிறோம். அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருவருளை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் ஆலயம்
சுதுமலை, மானிப்பாய்.

தர்மகர்த்தா சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உறுதி மிக்க சிந்தனையாளன்

''நேற்று இருந்த ஒருவன் இன்றில்லை என்ற பெருமை உடைத்து இவ்வுலகு'' ''திருவள்ளுவர் திருவாக்கு'' திரு. சி. மார்க்கண்டு ஜே. பி. அவர்களும் மானிப்பாய் பரிஷ ப. நோ, கூ. சங்கத் தலைவர் அவர்கள் நேற்றிருந்தார்; இன்று இல்லை பிறப்பு என்றால் இறப்பு நிச்சயம் ஆனாலும் அமரரின் இழப்பு கன்றை இழந்த பசு போல மானிப்பாய் கோவில்பற்று கிராமத்திற்குப் பேரிழப்பாகும்.

அமரர் அவர்களின் அளவான பேச்சு, கம்பீரமான தோற்றமும்; அமைதியான வாழ்க்கை செய்ய வேண்டிய கடமைகளை கன கச்சிதமாக செய்யும் முனைப்புடைய இனிய மலர்ச்சியான முகத் தோற்றமும் உடையவர். தன்னலம் கருதாது பிறர் நலமும் சேவை நலம் செய்யும் பண்பாளன்; மானிப்பாய் கிராம சபை அக்கிராசனராகவும்; அவர் அரசினர் சமாதான நீதவான் நியமனமாக அடக்கமாக ஏற்றுக்கொண்டு பொதுச் சேவையை திறம்பட மக்கள் தேவைகளை நிறைவேற்றினார் அவரது சிபார்சால் பயனடைந்தோர் பல நூற்றுக்கணக்கானோர் ஆவர்.

இவர்; மானிப்பாய் கோவில் பற்று பல நோ. கூ. ச. தலைவராகவும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் முகாமையாளராகவும் பணி புரிந்துள்ளார். இவர் இச் சங்கத்தின் வளர்ச்சிக்கும்; ஆலயப்பணிக்கும் ஆற்றிய பணிகளை அரிய சேவைகளையும் எங்களால் என்றும் மறக்க முடியாது. இவர் மன உறுதியும் தன் இலட்சியத்தில் திடநம்பிக்கையும் உடையவராக திகழ்ந்து வந்தார். இவர் சங்க விடயமாயினும்; அல்லேல் பொது விடயமாயினும் பணிகளைச் செய்வதற்கு உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுக்கும் ஆற்றலும் அனுபவமும் உடையவர். ஆற்றல் மிக்கவர்.

அன்னார் தன் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையும் மன உறுதியும் செயல் திறனும் மிக்க ஒருவராக வாழ்வாங்கு வாழ்ந்து 11-3-98ல் மாசி மக நன்னாளில் அம்பிகையின் திருவடிகளை அடைந்துள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**இ. சரவணபவன்**

ஆனைக்கோட்டை இந்து சமய

விருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்

# அனுபவ ஆசான் அமரர்

அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு ஐயா அவர்கள் திடீரென மறைந்த செய்தி கேட்டு திகைத்துப்போன இதயங்கள் பல. சேர்மன் என்றால் மார்க்கண்டு மார்கண்டு என்றால் சேர்மன். அவரை அறியாதோர் இங்கில்லை. பதவிக்கு பெருமை அளித்த பெருமகன். தனக்கோ, தன் குடும்பத்திற்கோ ஒரு சத மேனும் சேர்த்து வைக்காது சமூக சேவையாற்றியே தேய்ந்து போன சந்தனக்கட்டை.

கிராம அபிவிருத்தி, கூட்டுறவு, ஆலயம், சனசமூக நிலையம், கமத்தொழில் அபிவிருத்தி, புனர்வாழ்வு, நீதிபரிபாலனம் என அமரா பங்கேற்று தலைமையேற்று பல்துறை மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள். தனக்குரியவராக அன்றி பிறர்க்குரியவர்களாக வாழ்ந்தவர்கள்.

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் அமைவதற்கு அன்னார் ஆற்றிய சேவையினை கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள். சங்கத்தின் தலைமையினை ஏற்று அவர் ஆற்றிய சேவை, பணியாளர் மேல் காட்டிய அன்பும் அக்கறையும் என்றென்றும் எம்மனதில் நிலைத்து நிற்கும்.

பொறுப்புடைய தலைவராக, அயராத உழைப்பாளியாக மதிப்பு வாய்ந்த சமூக ஊழியனாக, சமயத்தொண்டனாக, எல்லோருக்கும் இனியவராக, மனித நேயமிக்கவராக உயர்ந்த பண்பாளனாக, ஐயா அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்தார்கள். அவரது எடுப்பான தோற்றம், மிடுக்கான பேச்சு, நகைச்சுவை நிரம்பிய உரையாடல், ஆளுமை படைத்த செயல்கள் யாவும் எம் நெஞ்சில் நீடூழி நிலைத்து நிற்கும்.

சமூகத்தில் அநீதி விளையும் போது அதனை எதிர்த்து நீதியை நிலை நாட்டுவதில் அவரொரு கர்மவீரர். எதிர்ப்புக்கள், துன்பங்கள், துயரங்கள் சூழ்ந்த வேளைகளில் அமைதியான முறையில் பிரச்சினைகளை லாவகமாக அணுகும் முறை ஆறுதல் கூறும் ஆற்றல் அவருக்கே உரித்தான சொத்து. அவரது இறுதிப் பயணம் கூட உறவோடு கூடி அவர் வாழ்ந்த வாழ்வின் சிறப்பினை, ஆற்றிய சேவையினை எடுத்துக் காட்டாக அமைந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் நெஞ்சம் என்றும் மறவாது. அவரது இழப்பு அன்னாரது குடும்பத்திற்கு மட்டுமின்றி எமது மண்ணிற்கும் ஏற்பட்ட ஒரு மா பெரும் இழப்பாகும். அவரது ஆத்மா அவருடன் அன்பாக பழகியவர்களை ஆசிர்வதிக்கும் என்பதில் ஐயமில்லை.

துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், கூட்டுறவாளர்கள் கூட்டுறவுப்பணியாளர்களும், ஆறுதல் கூறி அவரது ஆன்மா அவரது குலதெய்வமான சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களை சென்றடைந்தது என ஆறுதல் கொள்வோமாக.

"துஞ்சுவதுபோலும் சாக்காடு - துஞ்சி
எழுவது போலும் பிறப்பு."

V. M. ஜெயக்குமார்

ப. நோ. கூ. சங்கம் மானிப்பாய்

செயலாளர், கூ. ஊ. தொ. சங்கம் மானிப்பாய் கிளை.

## யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். (வது)

# நான் கண்ட மார்க்கண்டு

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத் தலைவர் அமரர் சி. மார்க்கண்டு அவர்கள். கூட்டுறவுத்துறை யாழ் குடாநாடு எங்கும் வியாபிக்க, தன்னை அர்ப்பணித்த கூட்டுறவின் தந்தை பெரியார் வீரசிங்கம் அவர்கள் தோன்றிய மண்ணில் தோன்றிய பெருந்தகை மட்டுமன்றி அவர் வழியே தன்வழி என வாழ்ந்தவர்.

சாந்தம், அமைதி, அடக்கம், ஆளுமை ஏனைய தலைமைத்துவப் பண்புகள் அனைத்தும் கொண்ட வெண்கலக்குரலோன் அமரர் மார்க்கண்டு அவர்கள், மானிப்பாய் கிராமசபை. மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம், ஈஞ்சடி ஞானவைரவர் கோவில் ஆகியவற்றின் தலைவராக சேவையாற்றியவர்.

தனது இறுதிக்காலம் வரை மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராக, சேவை செய்த இவரது மறைவு. குடும்

பத்தினருக்கும், மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்திற்கும் மட்டு மல்ல, மானிப்பாய் கோவில் பற்று வாழ் மக்களுக்கும், கூட்டு றவுத்துறைக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பாகும்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களை சேர்ந்து விட்ட அவரது ஆத்மா அமைதியடைய எல்லாம் வல்ல திருவருளை பிரார்த்திப்போமாக.

இப்படிக்கு
சி. வீ கந்தையா சிவஞானம் அவர்கள்
தலைவர்

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# இதய அஞ்சலி

அமரர் சி. மார்க்கண்டு அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து மிகுந்த கவலையடைந்தேன்.

அமரர் சி. மார்க்கண்டு அவர்கள் மானிப்பாய் பல நோக் குக் கூட்டுறவுச் சங்க தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றிய வர். அன்னார் இராம சபைத்தலைவராக, பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்தலைவராக, சமூக சேவையாளராக, ஆலய தர்ம கர்த்தா சபைத்தலைவராக, சமாதான நீதவானாக இன்னோ ரன்ன பதவிகளை வகித்து சமூக மேம்பாட்டிற்காக சேவை ஆற்றியவர்.

அன்னாரின் இழப்பு எமது சமூகத்திற்கு குறிப்பாக கூட் டுறவுத் துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் இழப் பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தினருக்கும் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரா திக்கின்றேன்.

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையாளரும் கூட்டுறவாளரும்

அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டினுடைய மறைவு கூட்டுறவாளர் மத்தியில் கவலையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இவர் தனது சேவை காலத்தில் கூட்டுறவை வளர்த்த தலைவர்களில் இவரும் ஒருவராகும். இவர் கூட்டுறவை வளர்த்த அதே காலத்தில் சைவ சமயத்தையும் வளர்த்து வந்தார். இதற்கு சான்றாக சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் பரிபாலன சபையில் முகாமையாளராக தனது இறுதிக் காலம் வரை தொண்டாற்றி வந்தார். இவரது சமூகசேவையையும் சைவத் தொண்டையும் ஏழை மக்களின் துயர் துடைப்பவராகவும் திகழ்ந்த இவரை அரசாங்கம் 'சமாதான நீதவான்' என்று பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

இவரின் சேவையை கண்ட மானிப்பாய் கிராம மக்கள் இவரை கிராம சபைத் தலைவராக தெரிவு செய்தார்கள். இதன் மூலம் அக்கிராமம் ஏனைய கிராமத்துடன் சரிசமனாக திகழ்வதற்கு அரும்பாடு பட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

நாட்டில் நடைபெற்ற இடப்பெயர்வு காரணமாக மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தில் தலைமை பதவியிருந்து சிறிது காலம் விலகிச் சென்று மீண்டும் பல இன்னல்கள் மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டு மீண்டும் கூட்டுறவுத் துறையின் மூலம் மக்களுக்கு சேவை செய்ய தலைமைத்துவத்தை ஏற்ற காலத்தில் மரணித்தது கூட்டுறவுத் துறைக்கு ஓர் பேரிழப்பாகும்

அன்னாரின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

ச. குமாரசாமி
தலைவர்
வ. கி. தெ. ப ப நோ. கூ. சங்கம்
நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டுதூய உள்ளம் படைத்த ஒரு சமாதான நீதவான் சமூக சேவைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்த பெரியார். கூட்டுறவுத்துறைக்கு அளப்பரிய சேவைகளை புரிந்து மானிப்பாய் பரிஸ் ப. நோ கூ. சங்கத் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். கூட்டுறவாளர்களின் இதயத்தை விட்டு அகலாதவர். ஆனைக்கோட்டைக் கிராமசபைக்கும். தலைவராக இருந்துகிராம மக்களுக்கு சேவையாற்றினார். சமயத் தொண்டனாகவும் ஈஞ்சடி வைரவர் கோவில் திருப்பணிச்சபை தலைவராகவும் விளங்கினார். பொதுப்பணித்துறை நாயகராக விளங்கிய அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டுவுக்கு எமது இதய பூர்வமான அஞ்சலி உரித்தாகுக. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்"

கா. குமாரசாமி
பொது முகாமையாளர்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்.
சுன்னாகம்

# மீண்டும் ஒரு குரல் ஒலித்தது

அமரர் திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு மானிப்பாய் ப. நோ. கூ., ச. தலைவர் அவர்கள் கூட்டுறவு மூலம் மக்கள் சமுதாயத்திற்கு சேவை செய்த பெரியர்ராவார்.

வலிகாமம் மேற்கு பகுதியின் பண்டசாலைச் சங்கங்களின் சமாசம் விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம் என்பன சங்கானையில் இயங்கிய காலத்தில் இருந்து இவரது சேவையை அறியக் கூடியதாக இருக்கின்றது.

பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் அறிமுகமான போது சுதுமலை ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் பாவனையாளருக்கு சேவை ஆற்றியதுடன் அக்காலத்தில் விவசாயிகளின் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியான வெங்காயம் சந்தைப் படுத்துவதற்கு அப்போதய வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனை கூட்டுறவு சமாசத்தில் குரல் கொடுத்தார் அமரர் திரு. சி. மார்க்கண்டு அவர்கள். இக்காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

1971ல் ப. நோ. கூ. சங்கங்கள் ஒருங்கிணைக்கப் பட்ட போது, மானிப்பாய் பகுதிக்கு ஓர் ஆரம்ப ப. நோ. கூ. சங்கம் வேண்டும் என்று குரல் கொடுத்து அதில் வெற்றி கண்டவர் அவரேயாவார்.

அக்குரல் யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி சங்கங்களின் சமாசத்தில், எனது தலைமையில் நடை பெற்ற ஓர் கூட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஒலித்த அதே குரல் மீண்டும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் சார்பில் ஒலித்தது. இது எல்லோர் மனதிலும் பதிந்திருக்கின்றது

அன்னாரின் மறைவினால் தவிக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தைச் சார்ந்த அனைவருக்கும் அப்பகுதி பொது மக்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்

இங்ஙனம்
ச. செல்வரத்தினம்
தலைவர்
பண். பரிஷ். ப. நோ. கூ. சங்கம்

---

எமது சபை "கிராம சபையாக" இருந்த காலத்தில் சபைத் தலைவராக இருந்த செயல் வீரன்

**திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு (J P)**

**அவர்களின்**

மறைவில் அவரின் குடும்பத்தாருடன் நாமும்

## அஞ்சலிக்கின்றோம்

கம்பீரமான நடை
கணீரென்ற குரல்
கட்டளை பிறந்தால் மறுபேச்சின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை முடிப்பர் -யாபேரும்
சொல் வீரன் அல்ல அவர்
செயல் வீரன்.
1965ல் பதவிக்கு வந்த வேளை
சபைக்கென்று நிலமோ, கட்டிடமோ
இருக்கவில்லை. அவரின் முயற்சியால்
சொந்த நிலம் வாங்கி சபைக்கென்று
கட்டிடம் அமைத்துத் தந்த பெருமை
அவரையே சாரும்
இப்போது தலை நிமிர்ந்து நிற்கும்
இந்த அழகான கட்டிடக்காணி
அன்று பெரும் பற்றைக்காடு இன்று
படிக்கட்டுடன் அழகிய மாடிக்கட்டிடம்
படிப்பதற்கு நல் நூலகம்—அத்துடன்
பார்வையாளருக்கும், நாடக அரங்கம்
அமைக்கும் திட்டம் பாதியில் நின்று விட்டது.
அவரின் பதவிக்காலம் முடிந்ததால்
அதுவும் நின்றிருக்கலாம். என்று நினைக்கின்
றோம்.

அவரின் கலாரசனையை அன்றைய
யாபேரும் அறிந்திருப்பர். வாகனம்
வந்து போவதற்கு உள்ளே பாதை அமைத்து
அழகான பூந்தோட்டம் அமைத்து
நடுவே நீரூற்று தொட்டி அமைத்து
பின்புறக் காணியில் தென்னை மரங்கள்
வைத்து "இது சபையா, இல்லை
மாளிகையா" என்று வியக்க வைத்த பெருமை
அவரையே சாரும்.
அவர் சிறந்த நிர்வாகி மாத்திரமல்ல
சிறந்த சமுக சேவையாளன்.
கிராமம் தோறும் வீதிகள் அமைத்து
வீதி விளக்குகள் வைத்து. மின்சாரமில்லாத்
தெருவுக்கு தானே முன்னின்று மின் வசதி
செய்து கொடுத்தவர்.
சபையின் வருமானம் அதிகரிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு நற்தொண்டு ஆற்ற வேண்டும்
இந்தச்சபை நாடறிய வைக்கப்பட
வேண்டும் என்ற நல்நோக்கு கொண்டவர்
பலரும் வியக்கும் வண்ணம் அன்று
''கானிவல்'' களியாட்ட விழா எடுத்து
நாட்டின் நாற்புறத்தில் இருந்தும் மக்கள்
வெள்ளம் திரண்டு வரச்செய்து
மக்களின் மனங்களில் நல் இடத்தை
தேடிக் கொண்ட அந்த உத்தமர்
1978ல் தனது பதவிக்காலம் முடியும்
வரை நாடும் வீடும் நமதிரு கண்கள
என்று. வாழ்ந்து காட்டியவர் இன்று
மீண்டும்

சபைத்தலைமை பொறுப்பேற்கும் காலப்
பகுதியில் அவரின் திடீர் மறைவு
அவரின் குடும்பத்தாருக்கு மாத்திரமல்ல
சபைச் சமூகத்திற்கு மாபெரும் இழப்பாகும்.
ஈடுசெய்ய முடியாத அவரின் மறைவையொட்டி
எமது வலி தென் மேற்கு பிரதேச சபை
உப அலுவலகம், மானிப்பாய் கிராமம்
சார்பாக அஞ்சலிக்கின்றோம்.

குஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கோர் செம்மல்

அன்பு, ஆளுமை, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பக்குவம், பலராலும் எங்கள் சேர்மன் என அழைக்கப்பட்ட உத்தமர். சமர்த்தர் அமரர் மார்க்கண்டு ஜே. பி. மறைந்துவிட்டாரா?

இல்லை, இல்லை, அவர் குடும்பத்தவர் உள்ளங்களில் மாத்திரமல்ல மக்கள் மனதிலும் என்றும் மறக்கமுடியாத மனப்பதிவுகளை விட்டுச் சென்றுள்ளார்.

எமது பகுதியில் நடமாடிப் பல பொது ஸ்தாபனங்களில் தலைமைப் பதவிகளை வகித்து சேவைக்கோர் செம்மலாகத் திகழ்ந்த அற்புதமான மனிதர் அவர்.

அவர் சேவையை அறிந்த இப் பகுதி மக்கள் அவரை இழந்து ஆழ்ந்த துயருற்றிருக்கிறார்கள்.

''துன்பமுறவரினும் செய்க துணி வாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என்ற வள்ளுவன் வழி வாழ்ந்த அமரர் மார்க்கண்டு எம் உள்ளங்களில் என்றும் வாழ்வார், இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் என்றும் உரியது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

''செல்வ அகம்''
ஆனைக்கோட்டை.

ந. சிவபாதம் ''புத்தொளி''
சமாதான நீதவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் மிக்கவர்

அமரர் மார்க்கண்டு அவர்களை நான் நீண்டகாலமாக அறிவேன். நான் அவரை முதலில் சந்தித்தது மானிப்பாய் கிராம சபையின் தலைவராக இருந்தவேளை.

இரண்டாவதாக மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத் தலைவராக. இக்காலப் பகுதியில் உள்ளூராட்சியில் சேவையாற்றும் போது உள்ளூராட்சித் திணைக்களங்களில் கலந்துரையாடலில் பங்கு கொள்ளும் போது அவர் மானிப்பாய் கிராமசபையின் பிரதிநிதியாகவும் நான் கொக்குவில் கிராமசபையின் பிரதிநிதியாகவும் பின்கூட்டுறவில் தலைவராக இருக்கும் காலத்தில் கூட்டுறவுத் திணைக்களங்களின் கலந்துரையாடலில் நாம் இருவரும் கலந்து கொள்ளும் பொழுதும் அவர் அக் கலந்துரையாடல்களில் வைக்கும் கருத்துக்கள் ஆணித்தரமாக இருப்பதனை நான் பல முறை கண்டுள்ளேன் அவர் எதற்கும் அஞ்சாதவர், அதேவேளையில் நல்ல மனிதநேயம் மிக்கவராகவும் நான் கண்டேன்.

அமரர் அம்பாளின் அப்பழுக்கற்ற தொண்டன் என்பதனை நிரூபிப்பது போல் அம்பாளின் முக்கிய தினமான மாசி மக நன்நாளில் அவரது ஆத்மா இறைவனடி சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்னார் ஒரு சிறந்த கூட்டுறவாளனாக சிறந்த தலைமைத்துவப் பண்புடன் தான் சார்ந்த ஸ்தாபனங்களையும் மக்களையும் வழி நடத்திச் சென்றுள்ளார் அன்னாரின் திடீர் மறைவு அன்னாரின் குடும்பத்திற்கும் கூட்டுறவாளர்களுக்கும்அவரது தலைமையில் வீறு நடைபோட்ட மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அவர் சார்ந்த ஏனைய சமூக அமைப்புகளுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திக்கிறேன்.

பெ. கனகசபாபதி
**யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை**
**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

நல்ல இதயம் படைத்த ஒரு பெருமகனாகிய சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்கள் இந்த மண்ணுலகை விட்டு பிரிந்து விண்ணுலகு அடைந்துவிட்டார். எங்களுடைய கண்முன் அன்பின் சொரூபமாக உலாவிய மார்க்கண்டு அவர்கள் இப்பொழுது எங்களது நெஞ்சிலே நிலையான இனிய நினைவுகளாக நிறைந்து நிற்கின்றார்.

தங்களைப்பற்றியே சிந்தித்து தங்களுடைய நன்மைகளை பெருக்கிக் கொள்ள ஆசைப்படுகின்ற மனிதர்களைத்தான் நாங்கள் இந்த உலகிலே பெரும்பாலும் காண்கின்றோம். வாழவேண்டும் என்று விரும்புகிறவர்கள். ஒன்றாக வாழவேண்டும் என்று விரும்புகிறவர்கள் உலகிலே சிலர்தான் இருக்கின்றார்கள். இப்படியான அதிசயமான மனிதர்களில் சி, மார்க்கண்டு ஒருவர்.

இவர் தினசரி வாழ்க்கையைத் தாம் வகுத்துக்கொண்ட சில வரையறைக்குள் வைத்துக்கொண்டவர். எதை செய்து எதை தவிர்ப்பது என்பது அவருக்கு தெளிவு இருந்தது. அந்த தெளிவு என்னும் பாதையிலேதான் அவர் நடந்தார்.

ஐயாவுடைய இந்த இறுக்கமான மன உறுதிக்கு இரண்டு காரணிகள் இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. ஒன்று அவருக்கிருந்த திடமான சுதுமலை அம்பாள் பக்தி. மற்றது துணிவு, அனுபவம், நேர்மை என்பவற்றில் அவர் கொண்டிருந்த ஆசையால் தளரா நம்பிக்கை. அவலங்களும் துன்பங்களும் நிறைந்துவிட்ட இன்றைய வாழ்க்கையில் நாம் மனம் சோர்வுற்றபொழுதெல்லாம் எங்களை தேடிவந்து மனவலிமையை தருகின்ற நண்பனாக விளங்கியவர். ஆனால் இன்று அவர் இல்லை அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

சுதுமலை மத்தி,
மாணிப்பாய்.

கு. பரமராஜா
லயன்ஸ் கழகம்
மாணிப்பாய் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரிகைகளில் கலந்து எமக்கு எல்லா விதத்திலும் ஈடுசெய்ய முடியாத உதவிகளை புரிந்த அன்பர்களுக்கும், தம் அனுதாபச் செய்திகளை நேரிலும், தந்தி மூலமும் தெரிவித்தவர்களுக்கும், தொலைத்தொடர்புக்கு உதவியவர்களுக்கும் ஆறுதல்கள் பல கூறிய அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய்
10-4-98

மனைவி, மக்கள்
மருமகன், மருமகள்
பேரப்பிள்ளைகள்



திருச்செல்வி அச்சகம் மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org